2003 மார்ச் 27]

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதில் போதுமானது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 113, திரு. கு. அன்பழகன், மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

113—

தொழிற்பேட்டை

***18569—திரு. கு. அன்பழகன்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரை நிலக்கோட்டை தொகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை தொடங்க நிலம் கையகப்படுத்தப்பட்டு, பின்னர் கைவிடப்பட்டது, மீண்டும் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நிலக்கோட்டை தொகுதியில் சிப்காட் தொழில் வளாகம் அமைப்பதற்குத் தேவையான நிலம் சுமார் 380 ஏக்கர் கையகப்படுத்தி, அதில் 250 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்சாலை தொடங்கத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் அமைக்கப்பட்டு, நிலம் ஒதுக்கீடு செய்யத் தயார் நிலையிலுள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ஒரு மருத்துவத் தொழில் பூங்காவை சுமார் 380 ஏக்கர் நிலப்பரப்பில் சிப்காட், நிலக்கோட்டை தொழில் வளாகத்தில் தொடங்குவதற்கான சாத்தியக் கூறுகளை ஏற்படுத்தி வருகிறது.

திரு. கு. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை நவீன தொழில் மிகுந்த நாடாக உருவாக்க வேண்டும் என்பதற்காக, 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எனது நிலக்கோட்டை தொகுதியில் சுமார் 380 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி, அவ்வாறு கையகப்படுத்திய நிலத்திற்குப்

பணத்தைப் பட்டுவாடா செய்து, அந்தத் தொழிற்பேட்டை உருவாக வேண்டும் என்பதற்காக, சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்தில் ஓடிக்கொண்டிருக்கின்ற வைகை நதியில் தண்ணீர் எடுப்பதற்காக ராட்சத மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூன்றை அமைத்து, அதற்கு மின்சாரம் வழங்க வேண்டும் என்பதற்காக ஒரு துணை மின் நிலையமும் அமைத்து, ஒரு துணை மின் கோட்டப் பொறியாளரையும், ஒரு அலுவலகத்தையும் தொடங்கி, சுமார் 150 மின் விளக்குகள்--சோடியம் விளக்குகள்--போட்டு ஒவ்வொரு யூனிட்டுக்கும் தார்ச் சாலைகள் அமைத்து அந்த நிலக்கோட்டை தொகுதி மாத்திரமல்லாமல் ஒட்டுமொத்தத் தமிழகமே தொழில்மயமாக மாற வேண்டும் என்பதற்காகத் திட்டமிட்ட அந்தச் சீரிய திட்டத்தை, 1996-க்குப் பின்னால் இந்த நாட்டை ஆள வந்தவர்கள் தனக்கு இரண்டு கண்கள் கெட்டாலும் பரவாயில்லை, தன்னுடைய எதிரிக்கு ஒரு கண்ணாவது......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்கு வாருங்கள். குற்றச்சாட்டு கூடாது.

திரு. கு. அன்பழகன்: கெட வேண்டும் என்பது போல், அந்தத் திட்டத்தைக் கைவிட்டு விட்டார்கள், புனித கோட்டையைக் கோட்டை விட்டவர்கள் என்னுடைய நிலக்கோட்டை தொகுதியிலே இருக்கின்ற தொழிற்பேட்டையையும் கைவிட்டு விட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. அன்பழகன், கேள்வி மட்டுமே கேளுங்கள். மற்றதை மற்ற நேரத்தில் பேசலாம்.

திரு. கு. அன்பழகன்: எனவே, இன்றைக்கு நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கடந்த ஆட்சியால் கைவிடப்பட்ட தொழிற்சாலை மீண்டும் தொடங்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டு அது தொடங்கப்படுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னதைப்போல், அதற்கான சாத்தியக்கூறுகள் அனைத்தும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டே தொடங்குவதற்கான வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2003 மார்ச் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 114, திரு. எச். ராஜா, மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

114—

மின்சக்தி ஒழுங்குமுறை ஆணையம்

***19005—திரு. எச். ராஜா:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002 ஜனவரிக்குள் தமிழகத்தில் மாநில மின்சக்தி ஒழுங்குமுறை ஆணையம் (State Electricity Regulatory Commission) முழுமையாகச் செயல்படக்கூடியதாக அமையும் என்று மத்திய அரசுக்கு மாநில அரசு உறுதி அளித்ததா?

(ஆ) ஆம் எனில், மாநில மின்சக்தி ஒழுங்குமுறை ஆணையம் எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையம் முழுமையாகச் செயல்படத் தொடங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

திரு. எச். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது Current subject Current ஆக எடுத்திருந்தால் better-ஆக இருந்திருக்கும். ஏனென்றால், இது 13 மாதங்களுக்கு முன்பாகக் கேட்டிருந்த கேள்வி. ஆகவே, இம்மாதிரியான விஷயங்கள் உடனடியாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் எனப் பேரவைத் தலைவர் அவர்கள் அந்த செக்ஷனுக்கு அறிவுறுத்துவது பலன் உள்ளதாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்கிறேன். அமைச்சருடைய பதிலுக்கு நன்றி.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS